# மெட்ரோ ரயிலில் இன்று முதல் கட்டணம் குறைப்பு

சென்னை, பிப்.22: மெட்ரோ ரயிலில் இன்று முதல் கட்டணம் குறைக்கப்படுகிறது.

மெட்ரோ ரயில் கட்டணத்தை குறைக்கக் கோரி பயணிகள் தரப்பில் இருந்து அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டது. இதை ஏற்று தமிழக அரசு நேற்று முன்தினம் மெட்ரோ ரயில் கட்டணத்தை ₹50ஆக குறைத்தது.

இந்த கட்டண குறைப்பு இன்று முதல் அமலுக்கு வருகிறது. 2-5 கி.மீ. வரை ₹20, 5-12 கி.மீ. வரை ₹30, 12-21 கி.மீ. வரை ₹40, 21-32 கி.மீ. வரை ₹50 கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

ஒரு மாத வரையறுக்கப்படாத மெட்ரோ பயண கட்டணம் ₹2,500 தான் வசூலிக்கப்படும் என மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.